ஸ்ரீ

ஸ்ரீ கிருஷ்ணாயபரப்ரம்மணே நம:



சுதாமா என்னும்

# குசேலர் கும்மி

இஃது

வளவனூர்

**M. பாகீரதி அம்மாளால்**

எழுதப்பட்டது.

முதல் பதிப்பு 3000 காப்பிகள்

சென்னை சுந்தரம் பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

காப்பி ரிஜிஸ்த்தர் செய்தது.

[2 அணா

1933.

ஸ்ரீ

ஸ்ரீ கிருஷ்ணயபரப்ரம்மணே நம:



சுதாமா என்னும்

# குசேலர் கும்மி

இஃது

வளவனூர்:

**M. பாகீரதி அம்மாளால்**

எழுதப்பட்டது.

---

முதல் பதிப்பு 3000 காப்பிகள்

---

சென்னை சுந்தரம் பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

காப்பி ரிஜிஸ்த்தர் செய்தது.

விலை.] [2 அணா

1933.

ஸ்ரீ விருத்தாம்பாள் துணை.

# முகவுரை.

குசேலர் கும்மி என்பதற்குக் குசேல முனிவரது சரித்திரத்தைக் கூறும் கும்மிப்பாட்டென்று பொருளாகும். இந்தக் குசேல முனிவரது சரித்திரம் பாகவதத்துள் ஸ்ரீ கண்ணபிரானது திவ்விய வைபவங்களைக் கூறும் தசம ஸ்கந்தத்தின் நடுவண் நிலவுவதாகும். இச்சரித்திரம் பக்தி வைராக்கிய மோட்க்ஷ சாதனங்களை உள்ளங்கை நெல்லிக்கனிபோல யாவருக்கும் எளிதில் விளங்கும். இது நீண்டகாலமாகக் கர்ண பரம்பரையாக வழங்கி வந்தமையால் அநேகம் பாக்கள் நாளடைவில் சிதையுற்றும் முன்பின்னாக மாற்றப்பெற்றும் வருதலை அறிந்த அடியேன், முன்னோர் வழங்கிவந்த முறைகளை அறிஞர்பால் ஆராய்ந்து அறிந்து அதன்படி இதனைத் திருத்தியும் கூட்டியும் சுத்தபாடமாக எழுதி இக்காலத்துச் சிறுமிகளுக்கு பயன்படும்படி திருத்தமாக அச்சிட்டு வெளிப்படுத்தினேன். கற்றறிந்த பெரியோர்கள் இதிலுள்ள குற்றத்தைக் களைந்து குணத்தை மாத்திரம் கைக்கொள்ளுமாறு பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்:

விருதாஜலம்
26-1-1933.

M. பாகீரதி அம்மாள்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.



# குசேலர் கும்மி

## 1. வேதாந்த நாடக ராகம்.

(1) சீருடைய குசலவர் கதை சிறப்புடன் நான்பாட
செல்வ கணபதி எனக்கு
சிந்தையில் முன்னடவீர்.

(2) செங்கரும்பும் மோதகமும்
செவ்விளநீர்க்குலையும் அன்புடனே
நான் படைப்பேன் யானைமுகத்தோர்க்கு.

(3) அக்ஷரங்கள் குறைந்தாலும்
அபத்த மிருந்தாலும்
பொறுத்தருள வேணுமையா
பூர்ண கிருபையாலே.

(4) சதுர்முகனார் தேவியரே
ஸரஸ்வதி தாயே
ஸந்ததமும் என்தன்நாவில் வந்துதவவேணும்.

(5) குசலவர் என்னும் ப்ராமணர் தான்
கொண்டல் வர்ணர் தோழர்
மகிமையுடன் குருவின் பாதம்
வணங்கி இருந்தாரும்.

(6) பக்தியுடன் குருவின் பாதம்
பணிந்து நமஸ்கரித்தேன்
பகவானுடைய கதையைப்பாட
பரம கிருபைவேணும்.

(7) குருகுல வாஸந் தன்னிலே
கூடி இருபேருமாய் அடவடமாய்
வித்தைகளை அப்பாஸித்து மிருந்தார்.

(8) விறகொடிக்க போனவிடத்தில்
மேகம் வந்து இருள
மழைகள் வந்து சொரிந்து
அதிக பயமானார்.

(9) இருபேருமாய் கைப்பிடித்து
இந்தனமும் கொண்டு
மரத்தடியின் கீழே அவர்கள்
மன மகிழ்ந்து மிருந்தார்.

(10) விறகு நினையாமல்
இருக்க வேணு மென்று
பட்டாலே மூடியவர்
பாங்குடனே நின்றார்.

(11) அருண உதயமானவுடன்
அந்த முனி தேவர்
பாலர்களெங்கே என்று
பத்தினியைக் கேட்டார்.

(12) இந்தனங்கள் கொண்டு வரச்
சந்திதன்னில் போனார்
இது வரையிலும் காணவில்லை
என்று மவள் சொன்னாள்.

(13) கேட்டு மந்த மகமுனியும்
முகம் கலங்கிக் கொண்டு
பார்த்து வருவேனென்று சொல்லி
புறப்பட்டங்கே நடந்தார்.

(14) எங்குமெங்கும் மழை சொரிய
எதிர்த்து வெள்ளம் பெருக
இருவர்களைக் காணமல்
இளைத்து முனிதேட.

(15) அதிக மழை பெய்திடவே
ஆறு வெள்ளம் பெருக
அங்கவரைக் காணமல்
அலைந்து முனிதேட.

(16) கோடை மழை பெய்திடவே
கொள்ளை வெள்ளம் பெருக
பாலர்களைக் காணுமல்
பதறி முனிதேட.

(17) வீடு எங்கும் தேடி தேடி
பாலரைக் காணுமல்
காடுதன்னில் தேடமுனி
கடுகனவே நடந்தார்.

(18) அப்பொழுது இருவர்களும்
முனி அண்டையிலே வந்து
அஞ்சலி வந்தனங்கள் பண்ணி
அடி வணங்கி நின்றுர்.

(19) பார்த்து மந்த மகமுனியும்
பக்ஷமுடன் கூடி
பார்த்தவாளொடொரு வார்த்தை
பக்ஷமுடன் சொல்வார்.

(20) இந்தனங்கள் வேண்டாமப்பா
எந்தனுக்கு இப்போது
நீங்களிருவர்களும் வந்துவிட்டால்
போது மென்று சொன்னுர்.

(21) அப்படிக்குச் சொல்லி முனி
அழைத்து மெல்ல வந்து
அவருடைய பாரியை
அண்டையிலே விட்டு.

(22) அதிக மழை தன்னிலிவர்
அலக்கழிந்து வந்தார்
பக்ஷமுடன் பாலருக்கு
ரக்ஷியது செய்தார்.

(23) பாலமிர்தம் உண்டுமவர்
பசிகளப்போ மாறி
அடைவடைவா வித்தைகளை
அப்யசித்து மிருந்தார்.

## 2. சுயம்வர ராகம்.

(1) குரு தக்ஷிணை கொடுக்கவென்று
கோவிந்தருமிப்போ
கொண்டு மந்த திரவியத்தை
குன்றதுபோல் குவித்தார்.

(2) அப்பொழுது ரிஷிபத்தினி
அண்டையிலே வந்து
அந்தரங்கமாக ஒரு
சேதி தன்னை சொல்வாள்.

(3) திரவியங்கள் வேண்டாமப்போ
ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தி ஸிஷ்யா
பாலகரை தந்து விட்டால்
போது மென்று சொன்னாள்.

(4) ஐஸ்வரியம் வேண்டாமப்போ
அகில மளந்தாரே
என் அருமை மைந்தரை தந்துவிட்டால்
போது மென்று சொன்னாள்.

(5) அந்த வார்த்தை தன்னை
கேட்டு மவாள் மன மகிழ்ந்து
கொண்டு துள்ளி யவாளொரு குதியாய்
ஸமுத்திரத்தில் குதித்தார்.

(6) தேடியந்தக் குரு புத்திரனை
திருக்கையினு லெடுத்து
கூடியவாளிருவருமாய்
குருகுலத்திலே வந்தார்.

(7) தனமுடனே தானியமும்
சம்பத்துக்களுடனே புகழுடனே
பாக்கியத்தே புத்திரனைக் கொடுத்தார்.

(8) மடிந்தவனும் இவனல்லவோ
வைகுண்டவாஸி உன் மகிமை
சற்றுமறியாமல் மாயைக்குள் இருந்தோம்

(9) குழந்தைகளே இன்னும் சில குற்றமிருந்தாலும்
இரங்க வேணும் எங்களுக் கென்று
இரு பேருமாய்ச் சொன்னார்.

(10) குருதக்ஷிணை கொடுத்த பின்பு
கோவிந்தரும் போனார்
குசலவருடைய கதையை
எடுத்து சொல்ல ஆரம்பித்தார்.

(11) குசலவர் மனம் வாடி
தவிக்கிறாரும் இப்போ தாரித்திரத்தினாலே
27 பிள்ளைகளாம் இன்பமுடனவர்க்கு.

(12) உடுக்க ஒரு வஸ்திரமில்லை
உருகிமனம் வாடி உலகளந்தார் பாதந்தன்னை
மனஸி லெண்ணி தேடி.

(13) ப்ராதக் கால ஸ்நாநம் பண்ணி
பக்தியுடன் கூடி படித்து மந்த
ஜெபதபத்தால் பாராயணம் செய்தார்.

(14) நித்ய கருமம் மத்யானம்
நீதி சாஸ்திர வகைகளெல்லாம்
விதவிதமாய் ஓதி.

(15) வழு க்ருகம் பிக்ஷை யீந்து
இரந்துமவர் வந்து பூரணமாய்
எண்ணி யதை பூர்ண கிருபையாலே.

(16) அதை பக்ஷமுடன் எண்ணி உண்டு
பசிகளைப்போ மாறி க்ருஷ்ணன் கதையைப்பாடி
முனி க்ருபையுடனே இருந்தார்.

---

## 3. நாதா நன்னானே ராகம்.

(1) ஒரு நாளைய தினம் தனிலே
உத்தமியாந்தேவி பத்தினியாந்தேவி யப்போ
பதிவிருதை யானவள்.

(2) ஸிஷ்ருஷைகள் செய்து மவள்
சிந்தை மனம் தேறி க்ருஷ்ணனென்று
ஒரு வார்த்தை பர்த்தாவுடனே உரைப்பள்.

(3) அன்புடைய தோழரன்றோ
இந்த உலகளந்த நாதரன்றோ
சென்றவரை கண்டு வந்தால்
தாரித்திரங்கள் தீரும்.

(4) என்று மவள் சொல்லலுமே
அந்த மகயோகி ஒன்று மறியாதவர் போல்
ஊமையைப் போலிருந்தார்.

(5) உடுக்க ஒரு வஸ்திரமில்லை
உண்ணச் சோறுமில்லை
பறக்குறாராம் பூர்வ ஜென்ம பாபத்தினாலே.

(6) தரிக்க முடி போகவில்லை
தாரித்திர துக்கம்
ஸ்வாமி யுடைய பாதம்
தன்னைக் கண்டு வரவேணும்.

(7) ஆலயம் கிடந்தாரே
அகில மளந்தாரே மானங்காத்து
துரோபதைக்கு வஸ்திரம் கொடுத்தாரே.

(8) பாரத யுத்தத்திலே
சாரத்யம் செய்தாரே பாண்டவர்க்கு
நடந்து பாக்யங் கொடுத்தாரே.

(9) சிலை உருவாய் கிடந்த
அகல்யை யென்னும் பெண்ணை
சாபம் தீர்த்துச் சந்தோஷித்து
வாழ்வு கொடுத்தாரே.

(10) சீமை கட்டி ஆளுகிற செங்கமலர் பாதம்
சென்றவரை கண்டு வந்தால்
தாரித்திரங்கள் தீரும்.

(11) அந்த வார்த்தை தன்னை
கேட்டு மவர் மணமகிழ்ந்து
கொண்டு பார்தவளோ டொருவார்த்தை
பக்ஷமுடன் சொல்வார்.

(12) அந்தரங்க தோழரை
நான் கண்டு வரப்போனால்
அணியரங்கனுக்கு நான்
என்ன கொண்டு செல்வேனென்றார்.

(13) நாலு முஷ்டி அவிலுமக்கு
நான் தருவேனையா நாதனுக்கு
க்காணிக்கை வையுமென்று சொன்னான்.

(14) ஒத்த நிலம் தன்னிலவள்
பொருக்கியந்த நெல்லை

அய்யனருக்கு கென்று சொல்லி
அவலே இடித்து வைத்தாள்.

(15) சின்ன வஸ்திரம் தன்னிலவள்
சுற்றி அந்த அவலே
தேசிகனர் கைதனிலே
கொடுத்து விட்டாளப்போ.

(16) வாங்கி யந்த அவலே மனமகிழ்ந்து
கொண்டு வைகுண்ட வாஸிதன்னே
மனதில் அவரெண்ணி.

(17) தாங்கி யந்த அவலே தன் கையினல்
கொண்டு துவாரகையைப் பார்த்து
மவர் நடந்து விட்டாரப்போ.

---

## 4. பாசவலே ராகம்.

(1) எங்கு மெங்கும் சோலேகளாம்
எங்கும் முத்து உருள பலவிதமாய்
புஷ்ப வகைகள் பரிமளங்கள் வீச.

(2) காற்றடிக்க கனி உதிர
கமுகு குலே சாய கரும்புகளும்
இடையிடையே முறிந்து விழுந்தாட.

(3) மது பொழிய தேன் சொரிய
மணங்கள் வந்து வீச மாடப்புரு
வண்டினங்கள் வந்து விளேயாட.

(4) சூக்ஷ்மான மயிலினங்கள்
தோகை விரித்தாட சிட்டு குருவி
பறந்து வட்டமிட்டு கூவ.

(5) கோகிலமும் குயிலினமும்
தாய்வெறுத்துப்பாட கூட்டமிட்டு
கிளிகள் பழம் கோதி விளேயாட.

(6) அன்னமோடு புருக்கள் அண்டமிரண்ட பக்ஷி
அதுகளெல்லாம் வந்து மங்கே
அழகாய் நடனமாட.

(7) பார்த்து பார்த்து மனமகிழ்ந்து
பக்தியுடன் விப்ரர் பத்தினியாலே
இந்த பாக்யமெல்லாம் கண்டோம்.

(8) கண்டு கண்டு மனமகிழ்ந்து
கண்கள் களி கூற கண்ண னுடைய
துவாரகையை கண்டு விட்டாரப்போ.

(9) ஆணிப் பொன்னுலிழைத்த
கோபுரத்தின் கீழே மாணிக்கத்தால்
கோட்டைகளின் மதிலழகைக் கண்டார்.

(10) சமுத்திரங்கள் நாலுபுறமும் தளும்பி
அலைமோத தங்கத்தினுல்
கோட்டைகளை கொத்தளத்தைக் கண்டார்.

(11) கடைஅழகென கடைதெருவென
கன்னுருடை வீதி
கன்னுருடை வீதியெல்லாம் மெல்ல மெல்லதாண்டி.

(12) கொல்லருடை வீதி யிது
குச்சலிய வீதி கோமுட்டி
வீதியெல்லாம் மெல்லமெல்லதாண்டி.

(13) பார்த்து பார்த்து மனமகிழ்ந்து
பக்தியுடன் நடந்தார்
ப்ராமண வீதியிலே வந்துவிட்டாரப்போ.

(14) செம் பொன் முத்து
பணிகள் பூண்டு சிறுவர் விளையாட
சிறுவயது பிள்ளைகளும் சாசரன்று வரவே.

(15) அன்ன நடை மாதரெல்லாம்
அங்கு நடமாட அக்கினி
கோத்திரங்கள் ஆகுதிகள் சூழ.

(16) கண்டு கண்டு மன மகிழ்ந்து
கண்கள் களிகூர கண்ணனொடு
துவாரகையில் உள்ளேவந்து நுழைந்தார்.

(17) அங்கு ஜெய விஜயாள் நிற்கலுமே அச்சமுற்று நின்றார்
ரத்ன ஸிம்மாஸனத்தி லிருந்தார் பச்சைமுகில் வர்னர்
பக்தர் வாரரென்று சொல்லி பார்த்தவரு மிருந்தார்.

## 5. கைலாச வாஸரடி ராகம்.

(1) தழைந்த தொரு சபை நடுவே
தடதடன்னு வந்து தயங்கி
அந்த வேதியரும் மயங்கி அவன் நின்று.

(2) ஜாதியீனமென்று சொல்லி
தள்ளி விடுவாரோ பஞ்சையைப்போல்
ஒரு மனுஷன் இங்கு வாரரென்று.

(3) பைத்தியக்காரனென்று நம்மை
தள்ளி விடுவாரோ ஏழையைப்போல்
ஒரு மனுஷன் இங்கு வாரரென்று.

(4) ஏமாளனென்று சொல்லி
தள்ளி விடுவாரோ ஸ்ரீ கிருஷ்ணன்
சேர்வை நமக்கு கிட்டுமோ கிட்டாதோ.

(5) என்று எண்ணியவர் சிந்தையிலே
மனந்தளர்ந்து தழைந்ததொரு
சபைநடுவே தடதடென்று வந்தார்

(6) அவர் வந்து மங்கே நிற்கலுமே
வஸுதேவ மைந்தர் கடுகெனவே
ஆசனத்தின் கீழ் குதித்திரங்கி.

(7) அவரைச் சந்தோஷமாய் கைபிடித்து
இருபேருமாய் போனர்
ரத்ன ஸிம்மாஸனத்தில் நேர்த்தியாக ஏத்தி.

(8) எத்தனை காலங்க ளாச்சு
என்னுடைய தோழரே
இப்படிநான் கட்டி இருக்க
இச்சை எனக்காவாய்.

(9) குருகுல வாஸந்தனிலே
கூடி இருபேருமாய் அட அடவா
வித்தைகளை ஆப்யசித்து மிருந்தோம்.

(10) விறகொடிக்க போன விடத்தில்
மேகம் வந்து இருள மகமுனியும்
தேடிவந்த வாஞ்சை மறந்தீரோ.

(11) குருதக்ஷிணை அவருக்கு கொடுத்தீரோ
அய்யா பரிவுடனே நீருமிப்போ
கல்யாணம் செய் தீரோ.

(12) மதனி யென்னும் பதிவிருதையாள்
மனையிலும் வந்தாளே மைந்தருண்டோ
சொல்லுமையா மனமகிழ்ந்து எனக்கு.

(13) குழந்தை உண்டென்று கோவிந்தற்கு
எப்படி நாம் சொல்வோம்
மௌனத்துடன் தலைகுனிந்துகொண்டு மவரிருந்தார்.

(14) சொல்லியே இருபேருமாய்
மனமகிழ்ந்து கொண்டு இப்படி
கூடிஇருக்க என்ன தபம் செய்தார்
அங்குள்ள பேர்களெல்லாம்
ஆச்சரியப் பட்டார்.

---

## 6. எழுதலை யார் ராகம்.

(1) ருக்மணி சபை தனிலே
ஜடுதியிலே வந்து தாயார் வந்து
கவரி வீசும் தகைமைகளும் போராதோ.

(2) நிறைந்த தொரு சபை நடுவே
லச்சையுடன் விப்ரர் பொதிஅவலை
எப்படி நாம் கொடுப்பொமென்று.

(3) அயக்கிரீவனரிந்து மந்த
சங்கு சக்கரதாரி மகத்துவமாம்
தோழருடன் வார்த்தை சொல்லும்போது.

(4) எந்தனையா உம்மிடத்தில்
இருக்கு மொருவஸ்து எந்தனுக்கே
வேணுமென்று இச்சையுடன்கேட்டு.

(5) வாங்கி அவில் பொரியை
மடியில்லைவைத்துக் கொண்டு
மகிழ்ந்து மவர் ஒருவார்த்தை
மகிமையுடன் சொல்வார்.

(6) எத்தனைக் காலமாச்சு
என்னுடைய தோழா இது எனக்கு
வெகு நாளாய் இச்சை கொண்டேனய்யா.

(7) மதனி என்னும் பதிவிருத்தையாள்
மைத்துனரை வேண்டி வஞ்சகம்
இல்லாமலிப்போ கொடுத்து விட்டாளென்று.

(8) நிறைந்த தொருசபை நடுவே
பொதிஅவலை அவிழ்த்து இரண்டுபிடி
அமுதுசெய்தார் அண்டமுண்ட நாதன்.

(9) அப்போழுது ருக்மணி அண்டையிலே
வந்து அந்தரங்கமாக
ஒருசேதி தன்னைச் சொல்வாள்.

(10) போதுமய்யா என்னுடைய பூர்ணகிருபையாலே
வேதியற்கு வேலை செய்ய
விட்டு விடாதேயும்.

(11) தாருமையா என்று சொல்லி
தன்கையினல் வாங்கி
தாஸிவேலை செய்ய என்னை
தள்ளிவிடா தேயும்.

(12) தாசிமகள் தானன்று சொல்லி கனவீரியத்தோடே
கிருஷ்ணன் பார்த்தவளொடொரு வார்த்தை
பக்ஷமுடன் சொல்வார்

---

## 7. தெற்கு கடல் காட்டும் ராகம்.

(1) எடுக்கெடுக்கும் ஜென்மத்துக்கும்
இவர்களுக்கும் கூடின் தாரித்திர
ஸ்திதிகளில்லாதே தத்தம் பண்ணுமென்றார்.

முடுகு.

அப்படியே ஆரதென்று
ஆதிலக்ஷிமியும் அனுக்ரகங்கள்
பண்ணி இருந்தாள்
அந்த படிதானே.

(2) மணம் புரிய எண்ணெ யிட்டு
மஞ்சள் நீராட்டி மகிமையுடன்
இருவருமாய் பாலமுர்தம் உண்டு.

முடுகு

பாலமுர்தம் புஜிச்சுமவான்
பசி இளைப்பு மாரியவாள்
ரத்ன ஸிம்மாஸனத்தில்
நேர்த்தியாக வீற்றிருந்தார்.

(3) ஏலமோடு ஜாதிக்காய் பச்சை
கற்பூரம் ஜாபத்ரி வால்மிளகு
சந்தோஷமாய் தின்றார்

முடுகு

அடக்கியவாள் ஆனந்தமாய்
இருபேருமாய் இருந்து அந்த
முகுந்தன் பள்ளியறையின்
மெத்தையின் மேல் படுத்தார்.

(4) அருண உதயமானவுடன்
தவமுனி தேவர் ஆஸ்ரமம்போய்
வாரேனென்று அவரிடத்தில் சொன்னார்.

முடுகு

அப்படியே ஆவதென்று
அழகு முடி குலுங்கி அவருடனே
வெகுதூரம் அனுப்பிவழிவிட்டு நடந்தார்.

(5) அற்பனுக்கு திரவியங்கள்
தந்து விட்டோமானால் அவதிவருமென்று
சொல்லி எண்ணி யிருந்தாரோ.

முடுகு.

துஷ்டனுக்கு திரவியங்கள்
கொடுத்து விட்டோமானால்
துணிச்சல் வருமென்று
செல்லி எண்ணி இருந்தாரோ.

(6) பாவிகட்கு திரவியங்கள்
கொடுத்து விட்டோமானால்
பழுது வருமென்று சொல்லி எண்ணியிருந்தாரோ.

முடுகு.

அற்பனாகி போகியே வந்தோம்
அந்த சபை நடுவில் அவர்
அநுக்ரகித்து வார்த்தை சொன்ன
அழகொன்றும் போறாதோ.

(7) இந்த அற்பனுடைய பொதிஅவலை
அந்தசபை நடுவில் பக்ஷணங்கள்
செய்திருந்த பாக்யங்கள்போறாதோ

முடுகு

தழைந்த தொரு சபைதனிலே
தடதடனே வந்து தாயார்வந்து
கவரிவீசின தகைமைகளும் போமுதோ

(8) எண்ணி எண்ணி மனதிலவர்
இன்பமுடனே புகழ்ந்து இருபுறமும்
சோலைகளும் தோப்புகளும் கண்டார்.

---

## 8. ரங்கநாதா ராகம்

(1) ஐஸ்வர்யம் தாராத ஆங்காரத்தினுலே
அங்கேயேன்னே துவாரகையை
சுற்று கிறேமென்று.

(2) திரவியங்கள் தாராத சிந்தை
மணஸாலே திருப்பியன்றே
துவாரகயை சுற்று கிறேமென்று.

(3) திகைத்து மவர் மனங் கலங்கி
திக்கு தடுமாறி மயங்கி
அங்கே சுற்று கிறார்.

(4) ஏழுநிலை உப்பரியில் இருக்கிற
தேவி பர்த்தா வராரென்று
சொல்லி பார்த்தவ ளிருந்தாள்.

(5) இங்கே ஐஸ்வரியம் வந்ததென்று
அவரறிய வில்லை
அங்கேயவள் தாதியுடன் தானிறங்கிவர.

(6) தடதடென்னு இறங்கி வந்து
தாளிணையில் பணிந்து சந்தோஷமாய்
இருவர்களும் அரண்மனைக்கே போனர்.

(7) நடுமத்தியான வேளையிலே
ஒருஉத்திமியாள் வந்து கொரடுகளும்
மேடைகளும் நம்மதென்று சொன்னாள்.

(8) சீருடைய குசேலர்க்கு
சிஷ்ருஷைகள் செய்ய தேன் மொழிமார்
ஆயிரம் பேர்அங்கே நடமாட.

(9) கைவிளக்கும் பொன்விசிறி
கனத்த தொரு மேடை

வேண சர்வ பாக்யங்களும்
கண்ணிலுல் கண்டார்.

(10) தேவகியாள் பெற்றெடுத்த
செங்கமலர் நாதர் சோலை ஒளித்து
கோகுலத்தில் வளர்ந்த தொருமாயன்.

(11) குடியிலொரு பூதலையைக்
கொன்றதொரு மாயன்
கோபியர்கள் வெண்ணெய் தயிர்
அள்ளி உண்ட பாலன்.

(12) உரலுருட்டி மரம்முறித்த உக்ரநரஸிம்மா
ஓடிவந்து அஸுரர்களை
மடியடித்த வீரன்.

(13) காளியின்மேல் நடனம் செய்த
கருணை குலசீலன்
காட்டுத்தீயைப் பானம் பண்ணின
காசாம்பு வர்னன்.

(14) மகபலிதன் சாலையிலே மண்ணளந்தமாயன்
மலைபாம்பை கிழித்தெறிந்த
வைகுண்ட வாஸி.

(15) பக்தர்களை ரக்ஷிக்கும் பரபிரும்ம மூர்த்தி
பார்த்து வந்த நம்மை
ரக்ஷித்து பாக்யமெல்லாம் தந்தார்.

---

## 9. மங்களம் ராகம் தேடி தேடி

(1) கோபியர்கள் பின் தொடர
கூரைகளை வாரிகொண்டு
குருந்து மேலே கொண்டொளித்த
கோபலற்கு மங்களம்

(2) கற்றாரும் கேட்டாரும் கேட்டு
ஸ்துத்தாரும் அந்த பரமபத
நாதருடை பாதத்தி லவாளிருப்பாள்.

(3) குசலவா ப்போ தேவியுடன்
ஒருவார்த்தை சொல்வார்
இந்த சம்பத்துக்கள் நமக்கு
வரகாரணங்கள் என்ன.

(4) என்னு மவர் கேட்கவுமே
அந்த மஹாயோகி பத்தினியாள்
தேவியப்போ பர்த்தாவுட னுரைப்பள்.

(5) அண்டமளந்த நாதருடை அனுக்ரகத்தினாலே
ஐஸ்வர்யம் கிடைத்ததென்று
அவருடனே உரைத்தார்.

(6) சொல்லியவள் தானிருந்தாள்
சின்மயமாய் அப்போ கிருஷ்ணர்
தயவென்று மனமகிழ்ந்தார்.

(7) வெகுகாலம் பூ மண்டலத்தில்
வஸித்து மவாளிருந்து
வைகுண்டமாநகரம் தனில்வந்து.

(8) பதவி அடைந்தார்
குசேலரைபோல் வைகுண்டபதவி
யாவரும் அடைவார். (கோ)

முற்றிற்று.

ஸ்ரீ ராமஜெயம்.

# வேதாந்த தாலாட்டு.

(1) பக்தியுடன் பாலா ஸாமளியை
மனதில் வைத்து முக்தி தரவேணுமென்று
ஸித்தி விநாயகரே

(2) தேனுடனே தேங்காயும்
செங்கரும்பும் மோதகமும் கணபதிக்கு
நான் படைப்பேன் நித்தியமும் கணபதிக்கு

(3) சங்கரரே விஷ்ணுவே
சதுர்முகனுர் ஸரஸ்வதியே
மங்கை உமையாளான ஸ்ரீ மகா லக்ஷிமியே

(4) அவா ளத்தனை பேருக்கும்
அநந்த நமஸ்காரம் பண்ணி
அற்புதமாம் வேதாந்த
வேதாந்த தாலாட்டைப் பாடலுற்றூர்.

(5) சித்தம் தெளியவின்னு ஸ்ரீ குருதேசிகரே
தத்வமஸி வாக்கியத்தால்
சற்குருவை பாடலுற்றூர்

(6) குற்றங்கள் உண்டானல் குறை தீர்த்து
நிறைவேற்றி தட்டு தடை அன்றியே
ஸம்பிரம்மா னந்தனுக்கு

(7) விமலமான பட்டணத்தில்
விவேகமுள்ள அரண்மனையில்
ஸுத்த மயமான
ஜோதிர் மய தொட்டிலுக்கு.

(8) அஞ்ஞானம் தான் போக்கி
அத்வைத தொட்டிலுக்கு
விக்கினங்கள் வாராதே
வேதாந்த கால் நிறுத்தி.

(9) காமக்குரோத மற்ற கல்லிழைத்த
சங்கிலியை காத்தவமில்லே
என்று கட்டி நால் நால் புரமும்,

(10) சித்த சுத்தி ஆன அந்த
ஜோதிர் மய தொட்டிலுக்கு
முக்தியென்னும் வென்பட்டை
கட்டினுள் மேல் கட்டாய்.

(11) மதம் ஆங்கார மழிந்துவர்
மங்கள தானழிந்து
மணமுள்ள மல்லிகைப்பூ
தொங்க விட்டாள் தொட்டிலுக்கு.

(12) அவதார த்ரியங்களுக்கு அரைஞாணும்
பொன் சதங்கை பவபவதி
என்னும் பச்சை திருநாமம் சாத்தி.

(13) ஸத்ய மென்னும் கல்லமுத்தி
ஞான மென்னும் கல்லமுத்தி
நித்யமவர் கண் வளர்ந்தார்
நிர் மலந்தார் ஜீவனுக்கு.

(14) ஸ்ரவண மென்னும் பாலாடைக்கு
மனன மென்னும் பாலெடுத்து
நித்யாஸனத் திருந்து நிர்குணத்தால்
போட்டி நின்றார்.

(15) பக்தியென்னும் பெண்களைப்போல்
ப்ரணவ மென்னும் கன்னிகைகள்
ஆத்ம சுத்தி தொட்டிலிலே
அன்புடனே பாடலுற்றார்.

(16) ஆராரோ ஆரிரரோ அகண்டரஸமானரோ
தாராரே தாராரே
தத்வ மஸியானரோ.

(17) நீயாரோ நானரோ
நித்திய ப்ரும்ம மானேரோ
கடாக்ஷித்து ரக்ஷித்த
கல்யாண சற்குருவே.

முற்றிற்று




NELSON & Co MADRAS